**Deposition of Witness**

**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 32 of 2021

எ.ம.சா.1 வைரமுத்து

| | | |
|---|---|---|
| Name | : | வைரமுத்து |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 03.12.2024 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் 2ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 1ம் எதிர்மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட டி.என்.09.8215 ஐ விபத்து சமயம் 2ம்எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்ததற்கான பாலிசி நகல் எ.ம.சா.ஆ1. விபத்து சம்பந்தமாக வேப்பூர் காவல்நிலையத்தில் மனுதாரர் மீது தாக்கல் செய்த குற்ற இறுதியறிக்கை நகல் எ.ம.சா.ஆ2.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து நடந்த இடத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த தேதியில் நான் 2ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்தேனா என்றால் பணிபுரிந்தேன். விபத்து திருச்சி டூ சென்னை தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரிதான். தேசிய நெடூஞ்சாலையில் 1ம்எதிர்மனுதாரக்கு பாத்தியப்பட்ட டி.என்.09.ஏ.இ.8215 என்ற வாகனம் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான்.

அந்த வாகனத்திற்கு பின்னால் மனுதாருக்கு பாத்தியப்பட்ட டி.என்.79.3694 ஆம்புலன்ஸ் வாகனம் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். அதற்கு பின்னால் 4ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட பேரூந்து சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி வாகனங்கள் ஒன்றுக்கு பின் ஒன்றாக சென்றது என்றால் சரிதான். ஆம்புலன்ஸில் உடன் சென்றவர்கள் பாபு என்ற நபரும்,சண்முகம்என்ற நபர் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் மனுதாரர் தான் வேகமாக ஒட்டி சென்று 1ம்எதிர்மனுதாரர் வாகனத்தின் பின்பகுதியில் மோதியதாக உள்ளது என்றால் சரிதான். மனுதாருக்கு பாத்தியப்பட்ட ஆம்புலன்ஸ் வேனில் பேரூந்து இடித்ததாக உள்ளது என்றால் சரிதான். மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்ட ஆம்புலன்ஸை சாலை விதிகளை கடைபிடித்து தான் ஒட்டிசென்றார் என்றாலும், பின்னால் வந்த அரசு பேரூந்தின் ஒட்டுனரின் கவனக்குறைவால் அதிவேகத்தினாலும் நடுவில் சென்று கொண்டிருந்த மனுதாருக்கு பாத்தியப்பட்ட ஆம்புலன்சில் வேகமாக சென்று மோதியதால் மனுதாரர் அவருக்கு முன்னே சென்ற 1ம்எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட காரின் பின்பக்கம் இடித்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இறந்து போன பாபுவின் உறவினர்கள் மற்றும் சண்முகம் ஆகியோர்கள் அவர்கள் சென்ற வாகனத்தின் ஒட்டுனரின் கவனக்குறைவால் விபத்து நடந்ததாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 4ம்எதிர்மனுதாரரான அரசு பேரூந்து ஒட்டுனரான 3ம்எதிர்மனுதாரர் தான் மனுதாரர் மீது கவனக்குறைவாக விபத்தை ஏற்படுத்தியதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 3ம்எதிர்மனுதாரரான அரசு ஒட்டுனர் மனுதாரரின் ஆம்புலன்ஸ் 1ம்எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட காரின் மீது மோதி எதிர்புறமாக திரும்பி 4ம்எதிர்மனுதாரர் பேரூந்தில் விபத்தை ஏற்படுத்தியது என கூறியுள்ளார் என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் அரசு பேரூந்தின் ஒட்டுனர் என்றால் சரியல்ல. அரசு பேரூந்தின் ஒட்டுனரின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றாலும் அவர் தன்னை தற்காத்து கொள்ள வேண்டி பொய்யாக மனுதாரர் மீதுபுகார் கொடுத்துள்ளார்

என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயம் மனுதாரர் மயக்க நிலையில் இருந்ததால் அவரால் புகார் கொடுக்க முடியவில்லை என்றால் சரியல்ல. விபத்து மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து 3ம்எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால்தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றாலும் அதனால் தான் அவர் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு 1,3 எதிர்மனுதாரர்கள் தான் காரணம் என்றால் சரியல்ல. மனுதாருக்கு எங்களது நிறுவனமும், 4ம்எதிர்மனுதாரரும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. குற்ற இறுதியறிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு போகவில்லை என்றால் சரியல்ல. விபத்து பற்றி அவருக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் வாகனம் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மனுதாருக்கு எங்களது நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.